22 | T | II

# "GEO" Published

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020 ஆவணி
General Certificate of Education (Adv. Level) Examination, August – 2020

# முன்னோடிப் பரீட்சை –02

புவியியல் - I I
Geography - I I

*Teacher:-*
*M.Sujinthan, BA(Hons) Spl.Geo*

மூன்று மணித்தியாலங்கள்
Three Hours

**அறிவுறுத்தல்கள்:-**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கு மாத்திரம் விடை எழுதுக

## பகுதி *I* – பௌதிகப் புவியியல்

***1.***

(i) மண்ணின் உருவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக?
(*2* புள்ளிகள்)

(ii) மேலே குறிப்பிட்ட மண் உருவாக்க காரணிகள் **இரண்டினை** சுருக்கமாக விபரிக்குக?
(*4* புள்ளிகள்)

(iii) மண்ணின் குறுக்குவெட்டு முகத்தை வரைந்து, அதன் படையமைப்புக்களையும் சுருக்கமாக விளக்குக? (*5* புள்ளிகள்)

(iv) இலங்கையின் ஈர வலயத்தில் காணப்படும் மண்வகைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின் பரம்பல், பண்புகள் தொடர்பாக ஆராய்க? (*5* புள்ளிகள்)

(v) இலங்கையில் மண்ணரிப்பினை தூணடும் மானிட செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக? (*4* புள்ளிகள்)

***2.***

(i) கடல் அலைகளின் தின்னல் செயற்பாடுகளைச் தீர்மானிக்கும் காரணிகளை குளிப்பிடுக?
(*4* புள்ளிகள்)

(ii) கடல் அலைகளின் தின்னல் செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (*4* புள்ளிகள்)

(iii) அலைகளின் செயற்பாட்டினால் உருவாக்கப்படுகின்ற **மூன்று** தின்னல் நிலவுருவங்களையும், இரண்டு படிதல் நிலவருவங்களையும் குறிப்பிட்டு விளக்குக.
(*6* புள்ளிகள்)

(iv) இலங்கையில் கடற்கரையோர அரிப்பிற்கு பெறுப்பான மானிட நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (*6* புள்ளிகள்)



M.SUJINTHAN

**3.**

(i) **மரபணுத் தொழில்நுட்பம்**, **பசுமைப் புரட்சி** ஆகிய பதங்களிற்கான வரைவிலக்கணங்களைத் குறிப்பிடுக? (*4*புள்ளிகள்)

(ii) விவசாயப் புரட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதியவகையான **விதையினங்களின்** உற்பத்திச் செயன்முறைகளினை விளக்குக. (*6* புள்ளிகள்)

(iii)பசுமைப் புரட்சியினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? (*5*புள்ளிகள்)

(iv)மரபணுத் தொழில்நுட்பத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **இவ்விரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (*5*புள்ளிகள்)

**4.**

(i) திணிவசைவு என்றால் என்ன? இலங்கையில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்படும் மாவட்டங்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக? (*4*புள்ளிகள்)

(ii) திணிவசைவு/ நிலச்சரிவினைத் தூண்டுகின்ற காரணிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக? (*4*புள்ளிகள்)

(iii)திணிவசைவு வகைகளினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (*4*புள்ளிகள்)

(iv)இலங்கையில் நிலச்சரிவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் அல்லது திணிவசைவை ஏற்படுத்தும் காரணிகளிகளினைக் குறிப்பிட்டு விளக்குக? (*6*புள்ளிகள்)

## பகுதி *II* – மானிடப் புவியியல்

**5.**

(i) இலங்கையின் நகரமயமாக்கச் செயற்பாடு தொடர்பில் செல்வாக்கு செலுத்தும் **பிரதான அம்சங்களைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

(ii) உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை குறைந்த நகராக்க மட்டத்தைக் கொண்டிருப்பதில் பங்களித்துள்ள காரணிகளைக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)

(iii)இலங்கையின் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் **மூன்றினை** உதாரணங்கள் மூலம் விளக்குக? (6 புள்ளிகள்)

(iv)இலங்கையின் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளினை இழிவளவாக்க முன்னெடுக்க கூடிய நடவடிக்கைகள் **மூன்றினை** உதாரணங்கள் மூலம் விளக்குக? (6 புள்ளிகள்)

**6.** அட்டவணை - 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| **காலம்** | **எடுத்த காலம்** | **சனத்தொகை** |
|---|---|---|
| வரலாற்றுக்காலம் முதல் கி.பி 1750 வரை | | கிட்டிய மில்லியனுக்கு 500 |
| *1804* | | *1* பில்லியன் |
| *1927* | *123* | *2* பில்லியன் |
| *1959* | *32* | *3* பில்லியன் |
| *1974* | *15* | *4* பில்லியன் |
| *1987* | *13* | *5* பில்லியன் |
| *1999* | *12* | *6* பில்லியன் |
| *2011* | *12* | *7* பில்லியன் |

**(i)** சனத்தொகை இரட்டிப்படைதல் என்றால் என்ன? அட்டவணை – 1 இன் தரவுகளின் அடிப்படையில் உலக சனத்தொகை வளர்ச்சி தொடர்பாக அவதானிக்கக்கூடிய பண்புகள் **இரண்டு** தருக? (4 புள்ளிகள்)

**(ii)** அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பிறப்பு வீதம் குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் **இரண்டு** குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளிகள்)

**(iii)** இலங்கையில் வெளிநாட்டு இடம்பெயர்வு இடம்பெறுவதற்கான காரணங்கள் **இரண்டினையும்** அதனால் ஏற்படும் நன்மைகள் இரண்டினையும் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

**(iv)** சனத்தொகை கூம்பின் நான்கு கட்டங்களையும் குறிப்பிட்டு, சுருங்கல் கட்டடத்தைக் கொண்ட நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் **மூன்றினை** குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

*7.*

(i) இலங்கையில் காணப்படும் சில முக்கிய கனியங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக?

(ii) இலங்கையில் அபதைற்று (பாறை பொஸ்பேற்று) உற்பத்தியில் பிரதானமான அண்மைக்காலப் போக்குகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

(iii) இலங்கையின் தேசிய அபிவிருத்தியில் கனிய வளங்களின் பங்களிப்புக்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

(iv) கனியவளங்களின் பயன்பாட்டினால் ஏற்பட்டும் சூழல்சார் பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

*8.*

(i) பிராந்திய அமைப்புகள் என்பதன் மூலம் நீர் விங்கிக் கொள்வது யாது?

(ii) ஐரோப்பிய ஒன்றியம் ***(European Union)*** அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக?

(iii) ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான நோக்கங்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(iv) இன்று ஐரோப்பிய ஒன்றியம் எதிர் கொள்கின்ற முக்கிய சவால்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?

M.SUJINTHAN